www.kalkionline.com

யாதுமாகி நிற்பாள்

# மங்கையர் மலர்

ஜூன் 16-30, 2014 | 146 பக்கங்கள் | ₹22 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹25 (பிற மாநிலங்கள்)

மாதம் இருமுறை

இணைப்பு:



இந்த இதழுடன்...
L'OREAL வழங்கும்
L'ORÉAL PARIS
NEW
6 OIL NOURISH
ஷாம்பூ பாக்கெட் கேட்டு வாங்குங்கள்!



## பிஸினஸ் உமன் சிறப்பிதழ்!

சந்திப்பு, படங்கள்: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



பிசினஸ் உமன் சிறப்பிதழ்!

# விறகு அடுப்பும் மண்பாண்டச்

*‘செல்லம்மாள் சமையல்’ என்கிற உணவகம், திருச்சியில் மிகப் பிரபலம். புத்தூர் அரசு மருத்துவமனை சாலையில், அமைந்துள்ளது இந்த உணவகம். விறகு அடுப்பும் மண்பாண்டச் சமையலுமே தன்னை ஒரு பிசினஸ் உமனாக மாற்றியிருப்பதாகக் கூறுகிறார் உரிமையாளர் எம்.செல்வி.*



வெண்டை சாம்பார் மணமும், வெந்தயக்கீரை கூட்டு வாசமும், மண் பானைக்குள் கொதித்துப் பொங்கியெழும் புழுங்கல் அரிசி சாத வாசமும் நம்மைக் கமகமவென வரவேற்கின்றன. வரிசையாக ஏழெட்டு மண் அடுப்புகள். புளிய விறகு உட்பட பல விறகுகள். அடுப்புப் புகை போக்கிகள் ஒவ்வொன்றும் பதினைந்தடி உயரத்துக்கும் மேலாக கட்டமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடுப்பிலும் மண் சட்டிகள், மண் பானைகள், வெந்து பொங்கு வதைக் கிண்டி விடுவதற்கென மர அகப்பைகள். காய்கறிகள், கீரைகள் என முழுமையான சைவ உணவுக்கு ‘செல்லம்மாள் சமையல்’ முழு கியாரண்டி.

என் கணவர் மோகன், கனிம வளத் தொழில் துறையில் பல ஆண்டுகளாக இயங்கியவர். பல மாநிலங்களில் தங்கியிருந்தவர். அப்போதெல்லாம் அந்தக் கிராமத்து மக்களின் மண்பாண்டச் சமையல் வாசமும், அதன் ருசியும் அவரைப் பெரிதும் ஈர்த்துள்ளன. அடிப்படையில் நானும் ஒரு கிராமத்துப் பெண் என்பதால், இருவரது விருப்பமும் ஒத்துப் போகவே, இந்த ‘செல்லம்மாள் சமையல்’ உருவானது என்கிறார் செல்லா என்கிற செல்வி.

‘இன்றைய உபசரிப்பு’ என்று பெரிய தகவல் பலகை. தினசரி முப்பது வகையான உணவுப் பொருட்கள் அந்தப் பலகையில் இடம் பெறுகின்றன. தினசரி நான்கு வகையான கீரைகள். அடுத்த நாள் வேறு நான்கு வகையான கீரைகள். புழுங்கல் அரிசி சாதம் தினசரி பொதுவானது. மாப்பிள்ளைச் சம்பா அரிசி சாதம், வரகு அரிசி சாதம், வெள்ளைக் குதிரை வாலி அரிசி சாதம், திணை அரிசி சாதம் என ஒவ்வொரு நாளும் மாறி மாறி ஒவ்வொரு வகையான சிறப்பு அரிசி சாதம். வெண்டை சாம்பார், தக்காளி ரசம், பூண்டு வெங்காயம் புளிக் குழம்பு, மண் சட்டித் தயிர்,



# சமையலும்!

புளிச்சக்கீரை, நல்லெண்ணெய், வெந்தயக் கீரை கூட்டு, வாழைப்பூ பொரியல், வாழைத்தண்டு தயிர்ப் பச்சடி, சுட்ட மிளகு அப்பளம் என மெனு பட்டியல் நீள்கிறது.

இவற்றைப் பரிமாறுவதும் மண் குடுவைகளில் தான். மண் குவளைகளில் தண்ணீர். அதுவும் ஓமமும் சீரகமும் போட்டுக் காய்ச்சி ஆற வைத்தக் குடிநீர். இவர்கள் இதற்காக ரொம்பவே மெனக் கெடுவது தனி வரலாறு.

''நாங்கள் உபயோகிக்கும் நல்லெண்ணெய் மரச் செக்கினால் ஆட்டப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். உடன் குடி (தூத்துக்குடி) சென்று ஒரிஜினல் பனை வெல்லம் வாங்கி வந்து மரச் செக்கு ஆட்டுபவரிடம் தந்து விடுவோம். மரச் செக்கில் எள்ளுடன் சேர்த்து அந்தப் பனை வெல்லத்தையும் போட்டு அரைத்து ஆட்டி தயாரிப்பதே எங்கள் 'நல்ல' நல்லெண்ணெய் ஆகும். பெரும்பாலும் பனை வெல்லம் சேர்த்து அரைத்து இப்போது எங்குமே நல்லெண்ணெய் தயாரிப்பதில்லை. எங்கள் விறகு அடுப்பும், மண் பாண்டச் சமையலும், செக்கில் ஆட்டிய நல்லெண் ணெயும் இணைந்த எங்க சமையல் ருசியே தனி!'' என்கிறார் செல்வி. ●

## மே 16–31
## இதழில் வெளியான
## பொது அறிவுப் புதிர்–13
## விடைகள்:

**1) சிதம்பரம், 2) திருச்சி, 3) கோயம்புத்தூர் , 4) வேலூர், 5) இங்கிலாந்து, 6) அமெரிக்கா, 7) ஹைதராபாத், 8) திருப்பதி.**

## ₹ 100 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்!

1. என்.சசிகலா-புதுச்சேரி, 2.சி.சந்தியா, தொரப்பாடி, 3.கே. மஞ்சுளா-உள்ளகரம், 4.என். ராணி-மதுரை, 5.பி. வசந்தகுமாரி-தஞ்சாவூர், 6.எஸ்.ஷ்ரவந்தி- சூளைமேடு, 7.பி.ஸ்ரீவித்யா- மதுரை, 8.ஜெ.கீதா சோமநாதன்- மத்தி கிரி, 9.ஆர். சந்திரா-காரிமங்கலம், 10.எம். பாரதி முருக நாதன்-நாமக்கல், 11.பி. நிஷாந்தினி-திருவாரூர், 12.ரா. மகாஸ்நேகா-திருவெறும்பூர், 13.பானுமதி சுந்தரம்-மாதளம்பேட்டை, 14.ஜி.கே.சாரதா-கோபி செட்டி பாளை யம், 15.எஸ். சுகந்தி-ஸ்ரீரங்கம், 16.பிரேமா ராமசுவாமி-வேளச்சேரி, 17.எஸ். சூரியாமணியன்-அருப்புக்கோட்டை 18.ராகினி சுந்தராஜ்-பெங்களூரு, 19.எஸ். காவேரி-இடையர்பாளையம், 20.எஸ். மலர்விழி கோவிந்தசாமி -ஊத்தங்கரை, 21.ருக்மணி ராமச்சந்திரன்-கோவை, 22.எஸ்.நளினி சுந்தராஜன்-பள்ளிக்கரணை,23.ஜி.பிரமிளா - தசரதபுரம், 24.மு. சிவரஞ்சனி-செய்யாறு, 25.லதா பொன்னுரங்கம்-அயப்பாக்கம்.

26.ஜெ.சேது-அண்ணாநகர், 27.சுஜாதா ரவிகுமார் -பெங்களூரு, 28.கே. முருகம்மாள்-திருநெல்வேலி, 29.எஸ். கௌரி லக்ஷ்மி-தஞ்சை, 30.எஸ். ஸ்ருதி-கிச்சிப் பாளையம், 31.க. அலமேலு மங்கை-ஓசூர், 32.ஜெ. ஸ்ரீதர்-ஈரோடு, 33.பானு பெரியதம்பி-சேலம், 34.லக்ஷ்மி மூர்த்தி-விசாகப்பட்டினம், 35.டி. விக்னேஸ்வரி-மன்னார் குடி, 36.எஸ். ராஜேஸ்வரி-ஈரோடு, 37.எஸ்.கே. ஈஸ் வரன்-பெங்களூரு, 38.எம்.ஆர். சாந்தா-மைசூர், 39. நீலோத்பலம்-சேலம், 40. கே.ஆர். ராமலட்சுமி-திருவனந் தபுரம், 41.சாந்தா-மும்பை, 42.வி. பார்வதி-ஆழ்வார் குறிச்சி, 43.எம். நிர்மலா செல்வி-திண்டல், 44.சி.எஸ். சாந்தி-கோவை, 45. இரா. லட்சுமி, செந்துறை, 46.ஏ. சசிகலா-அழகாபுரம், 47. ஆர். உஷா-மதுரை, 48. மீனாம்பிகா கணேஷ்-பொள்ளாச்சி, 49.கே.ஆர்.எஸ். சம்பத்-திருச்சி,50.என். விஜயா, தூக்கணாம்பாக்கம்.